# மீள்பார்வை: சகல இலங்கையரையும் வளமையை நோக்கி இணைத்தல்

நாடுகளின் பொருளாதார நிலக்காட்சி அதிகளவில் சமதளமற்று காணப்படும் அடிப்படை பிரதேசஞ் சார்ந்த மாற்றத்தோடே பொருளாதார முன்னேற்றமானது இடம்பெறுகின்றது. குறைந்த வருமானத்திலிருந்து உயர் வருமானத்தை நோக்கிய பயணமானது சில பிரதேசங்களில் மாத்திரம் உயர்ந்து செல்லும் வளமைமிக்க தன்மையின் மீது கவனக்குவிப்பு செய்யும் நிலையை கொண்டுள்ளது. சமசீரற்ற வளர்ச்சியே சாதாரண வழக்கமாக மாறியுள்ளதுடன் ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் அபிவிருத்தி அனுபவத்தையே உலகின் மிகவும் வளமைமிக்க நாடுகளாக எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறான சமசீரற்ற வளர்ச்சி சீனா, இந்தியா மற்றும் ஏனைய வளமடைந்து வரும் நாடுகளிலும் இடம்பெறுகின்றது. அதேவேளை பொருளாதார வாய்ப்புகள் அரிதான நிலையில் வாழ்க்கையை ஆரம்பிக்கும் மக்கள், சில இடங்களில் மாத்திரமே அதிகரித்துசெல்லும் செல்வக்குவிப்பின் மூலமாக நன்மையடையும் வாய்ப்புகள் உள்ளதால், அபிவிருத்தியானது அனைவரும் அனைத்தும் உள்ளடங்கிய ஒன்றாக காணப்படலாம். சமசீரற்ற அபிவிருத்து மற்றும் சகலதும் உள்ளடங்கிய அபிவிருத்தி இரண்டின் மூலமாக நாடுகள் நன்மைகளை பெற்றுக்கொள்ள உதவிபுரியும் பொருளாதா ஒருங்கிணைபப்பு கொள்கைகளின் நியமமாக “வளமையை நோக்கி மக்களை இணைத்தல்” காணப்படுகின்றது. “பொருளாதார புவியியலை மீளவடிவமைத்தல்” என்ற 2009 உலக அபிவிருத்தி அறிக்கையின் பிரதான நோக்கமாகும் (உலக வங்கி 2008).

முன்னேற்றத்துக்கான நீண்டகால அத்திவாரங்களை கட்டியுள்ள இலங்கைக்கு இந்நியமங்கள் மிகவும் முக்கியமானவை. நடுத்தர வருமான நாடாக இலங்கையின் வளர்ச்சி, உலக சந்தைகள் நாட்டை நோக்குகின்றன தன்மையின் துரிதமான மாற்றத்தினை கொண்டுள்ளது. உற்பத்தியானது 1975ற்கும் 2005ற்குமிடையில் ஆறு சதவீத தேசிய ஏற்றுமதிகளிலிருந்து 60 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. நாட்டின் பொரளாதார புவியியலை இது மீளவடிவமைத்துள்ளது. உலகின் ஏனைய பாகங்களுடன் இலங்கைக்கு இணைப்பினை ஏற்படுத்துவது வாணிக நிறுவனங்களே தவிர பண்ணைகள் அல்ல. துறைமுகத்தினூடாக 2008ல் 3.7 மில்லியன் கொள்கலன்களை அனுப்பிய கொழும்பிற்கு அண்மையில் தங்களுடைய உற்பத்தி கவனக்குவிப்பை மேற்கொள்ளுகின்றமையால் இவ்வாணிகநிலையங்கள் நன்மையடைய முடியும். இதன் காரணமாக கொழும்பும் அதன் அயல்புறங்ககளும் வளமிக்கவையாக மாறியுள்ளன. தற்பொழுது மொத்த தேசிய உற்பத்திக்கு மேல் மாகாணமே 50 வீதத்திற்குமதிகமான பங்களிப்பினை செய்வதுடன் சுமார் 527 பில்லியன் ரூபாய் வருமானத்தையீட்டி 540,000 மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் 37,000 கைத்தொழில் உற்பத்தி நிறுவனங்கள் கொண்ட நிலபரப்பாகும்.

உற்பத்தியில் கவனக்குவிப்பு செய்வதன் மூலமாக ஏனைய மாகாணங்களிலும் பார்க்க மேல் மாகாணமானத்தின் உற்பத்தியும் ஊதியமும் இரு மடங்கு அதிகமானதாகவுள்ளது. கொழும்பின் சூழ காணப்படும் பொருளாதார மலைகள் சாதகமான நிலைப்பாட்டை உருவாக்கும் தன்மை காணப்படுகின்ற

**உரு 1: கொழும்பை சூழ உள்ள வியக்கதக்க பொருளாதார மலைகள் தொலைவில் சிறு குன்றுகளை போல காட்சி தருகின்றது**




குறிப்பு: உபதேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்புகளின் அடிப்படையிலான உலக வங்கி அபிவிருத்தி குழுவின் இடஞ்சார்ந்த ஆய்வுகுழு

போதிலும் கொழும்பு வளர்ச்சியை நோக்கி செல்லும் பாதை அருகில் இல்லை (உரு.1). கொழும்பின் பொருளாதார செறிவு ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 15 மில்லியன் டொலர்களாகும். இதனை உலக சந்தையில் தங்களுடைய நாடுகளை இணைக்கும் பிரதேசங்களான ஹோ ீன் மின் நகரத்தின் சதுர கிலோ மீற்றருக்கான 37 மில்லியன் டொலர்கள், பங்கொக் நகரத்தின் சதுர கிலோ மீற்றருக்கான 88 மில்லியன் டொலர்கள் மற்றும் சிங்கபூர் நாட்டின் சதுர கிலோ மீற்றருக்கான 269 மில்லியன் டொலர்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

மேல் மாகாணத்தின் வளமைமிக்க தன்மையானது, கொழும்பிற்கு மிகவும் தொலைவில் வாழ்க்கையை ஆரம்பித்தவர்கள் உட்பட பல இலங்கையர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தியுள்ளது. பொழும்பு மாநகரத்தில் வசிக்கும் 650,000திற்கும் மேலான மக்கள் நாட்டின் ஏனைய பாகங்களிலேயே பிறந்துள்ளனர். பலர் அண்மையிலுள்ள காலி, களுத்தறை, கண்டி போன்ற பிரதேசங்களிலிருந்தும் சிலர் தொலைவிலிருக்கும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களிலிருந்தும் வந்து கொழும்பில் வசித்து வருகின்றனர். பிரயாண செலவை குறைத்து உற்பத்தி பொருட்கள் ஏனைய மாகாணங்களுக்கு சென்றடைய வழிவகுக்கும் A1 மற்றும் A2 பொன்ற தேசிய நெடுஞ்சாலைகள் மூலமாக ஏனையோர் இணைகின்றனர்.

பொருளாதார உற்பத்தி கவனக்குவிப்பு மிக்க ஒன்றாக மாறியுள்ள அதேவேளை சமூக நலைனை நிலைநாட்டுவதில் பொது கொள்கைகள் குறிபிடதக்க வெற்றியைக் கண்டுள்ளது. கல்வி அடிப்படை வைத்திய சேவைகள, நீர், சுகாதாரம் உள்ளடங்கிய அடிப்படை உட்கட்டமைப்பு நாட்டின் சகல பாகங்களுக்கும் சென்றடைந்துள்ளது. இது உலகிலும் பிராந்தியத்திலும் காணப்படும் அடுத்தக்கட்ட வளங்களை தங்களுக்கு அனுகூலமாக பயன்படுத்த இலங்கையை தயார்படுத்தி நடுத்தர வருமானத்துக்கூடான பயணத்தின் வேகத்தை துரிதப்படுத்தியுள்ளது. எனினும், இவ்வாறான இடஞ்சார்ந்த மாற்றங்களை துரித வேகத்தில் அடைந்து அதிகளவிலான இலங்கையர்களை வாய்ப்புக்களுடன் இணைக்க இவ்வாறான சந்தர்ப்பங்களை அனுகூலமாக்குவதற்கு கொள்கைகள் அவசியப்படுகின்றன. “இலங்கை: வளமையை நோக்கி மக்களை இணைத்தல்” என்ற இவ்வறிக்கை பிரதேசஞ்சார்ந்த குறிபிட்ட சில சவால்களுக்கு முகங்கொடுக்க தேவையான அண்மையில் பூர்த்தி செய்யப்பட்ட

புற ஆய்வுக்குறிகள் மற்றும் ஆக்க தேர்வுகளைக் கொண்டு மேற்குறிப்பிட்ட கொள்கைகளையும் அதனுடன் தொடர்புபட்ட முதலீடுகளையும் முன்னுரிமைபடுத்துவதற்கான உள்நோக்கங்களை எடுத்துரைக்கின்றது.

## வளமையை நோக்கி மக்களை இணைத்தல

தேச ஒருங்கிணைப்பிற்கான கொள்கை சட்டகம் ஒன்றினை "உலக அபிவிருத்தி அறிக்கை 2009: பொருளாதாரப் புவியியலை மாற்றியமைத்தல்" வழங்குகின்றது. அத்துடன் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களால் கைவிடப்பட்ட பிரதேசங்களில் வளர்ச்சியை அதிகரித்தல் என்பதில் மாத்திரம் முழுமையான கவனத்தையும் செலுத்தாது பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரதேசங்கள் மற்றும் முன்னேற்றமடைந்த பிரதேசங்களுக்கிடையில் காணப்படும் அதிகரித்த பிண்ணிய செயற்பாடுகளின் மீதும் பொதுக் கொள்கைகள் அக்கறை செலுத்த வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. நாடுகள் துரித கதியில் ொருளாதார முன்னேற்றத்தை அடையவும் பிரதேசங்கள் மத்தியில் வாழ்க்கை தரம் ஒன்றோடொன்று இணைவதற்கும் தேவையான பிரதான காரணிகளாக தொழிலாளர் தொடர்பான புவியியல் நகர்வினை ஏற்படுத்தலும், மற்றும் பின்தங்கிய மற்றும் முன்னேற்றமடைந்த பிரதேசங்களுக்கிடையிலான பொருளாதார இணைப்பினை விருத்தி செய்தலுமாகும் என பொருளாதார புவியியலை மாற்றியமைத்தல் என்ற அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. எவ்வாறான கொள்கைகள் இதற்கு உதவலாம்?

"இடஞ்சார்ந்த குருட்டுத்தன்மை" கொண்ட கொள்கைகள் உருவாக்கமானது இடஞ்சாரந்த கூர்மையான விளைவுகளை கொண்டுள்ளது. முன்னேற்றமான வருமான வரிக் கொள்கைகள், அடிப்படை சுகாதார மற்றும் கல்வி சுட்டிகளுக்கான தேசிய குறைந்தப்பட்ச தரங்களை அடைதல் மற்றும் தொழிலாளர் நகர்விற்கான தடைகளை அகற்றல் போன்றவையே இந்த பொது ஸ்தாபனங்கள் உள்ளடக்கும். அத்துடன் போக்குவரத்து மற்றும் தொலை தொடர்பு முன்னேற்றங்கள் போன்ற "இடஞ்சார்ந்த இணைப்பு" கொள்கைகள் பின்தங்கிய பிரதேசங்களையும் முன்னேற்றமடைந்த பிரதேசங்களையும் நேரடியாக இணைக்கும். பொருளாதார அபிவிருத்தியை அதிகரிக்கும் "இடஞ்சார்ந்த இலக்குகள்" தொடர்பான உள்ளீடுகள் இறுதி உபாயமாக கையாளப்பட வேண்டிய கொள்கை யுக்தியாகும். உள்ளக பிரவுகளின் காணமாக காரணிகளின் நகர்வு பலமற்று காணப்படும்பட்சத்தில் மாத்திரமே கடைசி உபாயமாக இதனை உபயோகிக்க வேண்டும் (உரு 2). இவ்வாறான நிலைகளில் ஒப்பீட்டு லாபக் காரணிகளை இனங்காணவும் மற்றும் இடஞ்சார்ந்த குருட்டுத்தன்மை மற்றும் இணைப்பு கொள்கைகள் மூலமான நன்மைகளை அதிகரிக்கவும் தகவல்களில் முதலீடு செய்யத பின்னரே உள்ளீடுகள் தொடர்பாக சிந்தித்தல் வேண்டும். எனினும், தற்போதைய நிலையில், இடஞ்சார்ந்த இலக்குகளை இலங்கையில் பல கொள்கைகள் அளவுக்கதிகமாகவே வலியுறுத்துகின்றன. வறுமை பிரதேசங்களில் பொருளாதாரத்தை உடனடியாக ஆரம்பிக்க எவ்வாறான கொள்கைகள் அவசியம்?

துர்அதிஷ்டவசமாக இம்முயற்சிகள் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார நன்மைகளை அளிக்கவில்லை. கொழும்பிற்கு அப்பால் பொருளாதார நடவடிக்கைகளை நகர்த்த முதலீட்டுச்சபையினால் வழங்கப்பட்ட மானியங்களை கருத்தில் கொள்ளவும். 200 ஆடை கைத்தொழில் தொழிற்சாலைகள் திட்டத்தில் முதலீட்டுச்சபை சட்டத்தின் 17வது உறுப்பின் கீழ் அனுமதி வழங்கப்பட்ட 80 சதவீத முதலீடுகள் மேல் மாகாணத்தில் நடைபெற்றதேயன்றி பின்தங்கிய பிரதேசங்களில் இடம்பெறவில்லை என்பதை இவ்வறிக்கையின் ஆய்வு எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் தொழில் வாய்ப்பினை உருவாக்க உதவிபுரியும் "நிபெயும் ஸ்ரீ லங்கா" என்ற முக்கிய திட்டத்தில் முதலீடு செய்யப்பட்ட 44 மில்லியன் ரூபா பணத்தொகையில் 21 மில்லியன் ரூபா மேல் மாகாணத்திலேயே உபயோகப்படுத்தப்பட்டது. ஏனைய வியாபாரங்களுக்கும், சர்வதேச நுழைவாயிலண்டைக்கும் நிறுவனங்கள் தங்களுடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாக நன்மையடைவதன் காரணமாக தொழிற்சாலைகள் வேறு இடங்களுக்கு நகர்த்துவது தொடர்பான கொள்கைகள் உற்பத்தியையும் லாபத்தினையும்

**உரு 2: உள்நாட்டு அபிவிருத்தி கொள்கைகளின் வகுப்பு தொகுப்பு முறை**




தகவல்: உலக வங்கி அறிக்கை 2009

பாதிக்கும். இதேபோன்று பின்தங்கிய பிரதேசங்களில் கிராம அபிவிருத்தியை அதிகரிக்கும் பொருட்டு விவசாய நிலங்களின் உபயோகம் மற்றும் கைமாற்றம் தொடர்பான சட்ட முயற்சிகள் பிரதிகூலமான வீளைவுகளையே ஏற்படுத்துகின்றன. நில அபிவிருத்தி சட்டங்கள் கிராம பிரதேசங்களில் பன்மைபடுத்தலை மட்டுப்படுத்தவது மட்டுமல்லாமல் பண்ணை மற்றும் பண்ணையல்லாத செயற்பாடுகள் இரண்டிலேயுமே மிகவும் குறைந்த ஊதியம் வழங்கப்படும் காரணத்தால் வறுமை குறைப்பு திட்டத்தின் முன்னேற்றத்தினையும் குறைத்துள்ளது. பிரதேச ஒருங்கிணைப்பிற்கான கூர்மைமிக்க யுத்திகள் எவை?

முதலில், அடிப்படை சேவைகள் சகல இடங்களிலும் காணப்படுகின்றது என்பததை உறுதி செய்தல் வேண்டும். அடிப்படை சேவைகள் எவைகளை உள்ளடக்க வேண்டும் என்பதை வரையறுப்பதில் நடுத்தர வருமான இலங்கை சிந்திக்கலாம். தற்பொழுது காணப்படும் சவாலானது இச்சேவைகள் புவியியல்ரீதியில் சமத்துவ அடிப்படையில் கிடைக்கப்பெறுகின்றனவா என்பதை உறுதி செய்வதல்ல, அனால் இச்சேவைகளின் தரத்தை உயர்த்துவதேயாகும். வகுப்பு எட்டு மாணவர்களில் 70 வீதமே தங்களது தாய்மொழியிலும் கணிதத்திலும் சித்தியடையும் அதேவேளை 50 சதவீதம் மாத்திரமே ஆங்கிலத்தில் சித்தியடைகின்ற கல்வி முறைமை, கல்வியின் தரம் மேலும் உயர்த்தப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் இது மேலும் குன்றிய நிலையில் காணப்படுவதால் கல்வியின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டினை அதிகரிப்பது மிகவுமட முக்கியமானதொன்றாக கருதப்பட வேண்டும். இது பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் பிள்ளைகள் பலம் வாய்ந்த இடங்களின் தொழிற்சந்தைகளினுள் பிரவேசிக்கும் ஆற்றலை அதிகரிக்கும்.

மேல் மாகாணங்களில் கல்விக்கான செலவீனங்கள் அதிகம் என்றும் ஏனைய மாகாணங்களிலிருந்து தொழிலாளர் நகர்ச்சிக்கு வழிவகுத்தல் தேசிய வருமையை மேலும் குறைக்குமென்றும் இவ்வறிக்கையின் ஆய்வுகள் காண்பிக்கின்றன. ஆள்சேர்ப்பு வீதம் குறைவாகவுள்ள இடங்களுக்கு ஒதுதக்கப்பட்ட தொகையை தொடர்ந்து பேணுவதில் கவனஞ் செலுத்தலும் அத்தொகையை மிகவும் அவசியமான கற்பித்தல் மற்றும் கற்றுக் கொள்வதற்குமான மூலங்களில் உபயோகித்தலும் கல்வி தரத்தை உயர்த்துவதற்கான ஒரு வழியாகும். ஆனால் சர்வதேச தரத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கையில்,

இலங்பை கல்விக்காக சிறிதளவே முதலீடு செய்கின்றது. அத்துடன் னாலத்திற்கு காலம் கல்விப்பான பொது முதலீடுகளும் அதிகரிக்கப்பட வேண்டும். தேசிய மாற்றத்திற்கு மூன்றாம் நிலைக் கல்வி ஓர் முக்கிய தூண் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லாத போதிலும் உயர் கல்வி மானியங்கள் மேல் மாகாணத்திலுள்ள செல்வந்த குடும்பங்களுக்கே விகிதாசாரமற்ற ரீதியில் அனுகூலமாக காணப்படுகின்றன. இடஞ்சார்ந்த பயனுறுதிக்கும் வளமைமிக்க நிலைக்கு மக்களை இணைப்பதற்கும் காணப்படும் தெரிவுகளில் ஒன்றாக மூன்றாம் நிலைக் கல்வியை வழங்குவதில் தனியார்துறையின் ஈடுபாடும் உள்ளடக்கப்பட வேண்டும்.

தற்பொழுது சுகாதார சேவைகளை நோக்கவும், மாகாண மட்டங்களில் இது சகல இடங்களிலும் முறையாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன் நடுத்தர வருமான நாடுகள் தரத்தில் வைத்தியசாலை படுக்கைகளை அளவுக்கதிகமாக கொண்டுள்ளது. ஆனால் மாகாண சபைகளால் நாடத்தப்படும் வைத்தியசாலைகள் வலையமைப்பினால் வழங்கப்படும் சேவைகளை மக்கள் பயன்படுத்திக் கொள்வது மிகவும் அறிதாகவே காணப்படுகின்றது. இதற்கு காரணம் கீழ்மட்ட வசதிகள் மற்றும் சேவைகளைவிட்டு மக்கள் சகல உபகரணங்கள், வளங்கள் கொண்டு பல்வகையான சேவைகளை வழங்கும் தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் வைத்தியசாலைகளை நாடுகின்றனர். ஓர் முறையான ஆலோசனை முறைமை இல்லாதமையும் மற்றும் இம்முறையில் இலவச சேவைகள் உள்ளமையும் இதற்கு காரணமாக அமையலாம். பின்தங்கிய பிரதேசங்களில் காணப்படும் வசதிகள் வைத்திய நிபுணர்கள், பொது வைத்திய அதிகாரிகள் மற்றும் தாதிமர்களை கவர்வதில் சிக்கல்கள் காணப்படுகின்றன. மாகாண ரீதியில் முகாமை செய்யப்படும் வைத்தியசாலைகளில் வசதிகள் குறைவாகவிருப்பதே இதற்கு காரணமாகவுள்ளது. மேலும் உயர் வசதிகளும் வளங்களும் காணப்படும் வைத்தியசாலைகளினாலும் சுகாதாரத்துடன் தொடர்பற்ற ஏனைய வசதிகளினாலும் உதாரணமாக தனியார்துறை மூலம் வருமானமீட்டும் நல்ல வாய்ப்புகள் போன்றவற்றினாலும் தேர்ச்சிப்பெற்ற வைத்திய அதிகாரிகள் தொடாந்து மேல் மாகாணத்தினேயே விரும்புகின்றனர்.

இரண்டாவதாக, பின்தங்கிய மற்றும் முன்னேற்றமடைந்த பிரதேசங்களை இணைப்பதற்கான உட்கட்டமைப்பை கட்டியெழுப்பல். சர்வதேச தரத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பொக்குவரத்து

**உரு 3: போக்குவரத்து விருத்தி உபாயங்கள் “வறியமக்க மலைகளை” “வளமை மிகு சிகரங்களுடன்” இணைக்க வழிவகுக்கும்**




தகவல்: Felkner et al (பின்புல ஆவணம்), HIES தரவு 2006,
உபதேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்புகளின் அடிப்படையிலான உலக வங்கி அபிவிருத்தி குழுவின் இடஞ்சார்ந்த ஆய்வுகுழு.

செலவு அதிகரித்து காணப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் உற்பத்திகளை கொண்டு செல்வதற்கு ஒரு கிலோ மீற்றருக்கு செலவாகும் 1.25 டொலருடன் ஒப்பிடுகையில் இருமடகொங்கிற்கும் அதிகமாக இலங்கையில் 2.90 டொலராக காணப்படுகின்றது. “கரடு முரடான” பாதைகள் போக்குவரத்து செலவினை மேலும் கூட்டுச்செலவினை குறைக்க உதவும் போக்குவரத்து முன்னேற்ற விருத்திகளை இனங்காண்பது ஓர் சவாலாக அமையும். இடஞ்சார்ந்த ஒப்புரவு தோற்றத்தில், பின்தங்கிய பிரதேசங்களில் இணைப்பினை அபிவிருத்தி செய்வதே சவாலாக கருதப்படும். இப்பயனுறுதி மற்றும் சமநிலை வர்த்தகதன்மையை போக்குவரத்து கொள்கைகள் எவ்வாறு முகாமை செய்யலாம்?

கொழும்பு மாநாகர எல்லைகளில் போக்குவரத்து நெருக்கடியளவு கூடியது நாளுக்கு 60,000 முதல் 80,000 வாகனங்களாகவிருக்கும். A1, A2, A3 மற்றும் A4 தேசிய நெடுஞ்சாலைகளிலேயே “கரடுமுரடான” பாதைகளின் கூட்டுச்செலவு அதிகமாக உணரப்படுகின்றது. இதற்கு மாறாக ஊவா மாகாணத்தில் காணப்படும் தேசிய வீதிகளில் உதாரணமாக போக்குவரத்து நெருக்கடியளவு நாளுக்கு 1500ற்கும் 2500ற்குமிடையிலேயே காணப்படுகின்றது. அதன் நன்மைகளை வெளிக்காட்டும் வகையில் பாதைவழிகளில் போக்குவரதத்து தரத்தை உயர்த்துதல் முழு போக்குவரத்து ஒழுங்குமுறையின் பயனுறுதியை முன்னேற்றி நாடு முழுவதும் போக்குவரத்து செலவினை குறைக்கும். கண்டியை (மத்திய மாகாணம்) கொழும்புடன் இணைக்கும் வீதியே அதிகமான போக்குவரத்து நெருக்கடி அளவினை கொண்டுள்ளதோடு பாரிய தொகையிலான வறிய மக்களை வளமைமிக்க வாழுவுட்ன இணைக்கிறது. வீதி உட்கட்டமைப்பு பகிர்ந்தளிப்பு, போக்குவரத்து நெருக்கடி கேள்வி மற்றும் போக்குவரத்து செலவுகள் தொடர்பாக இடஞ்சார்ந்த விரிவான தகவல்களை உபயோகிப்பது போன்ற செயற்பாடு கண்டிக்கும் கொழும்பிற்குமிடையிலான போக்குவரத்து அபிவிருத்திகள் அதிகளவிலான செலவுகளை குறைக்கும் என்பதை எடுத்துரைக்கின்றது. இது தேசிய மட்டத்திலும் ஊவா மாகாணத்தின் பின்தங்கிய பிரதேசங்களிலும், கிழக்கு மாகாணம் மற்றும் வட மாகாணங்களுக்கும் பொருந்தும். “வறுமை மலைகளிலிருந்து” “வளமையின் சிகரங்களுக்கு” செயற்திறன்மிக்க ரீதியில் இணைத்தல் என்ற வகையில் போக்குவரத்து பாதைகள் பாரிய சந்தைகளுடன் இணைவதால் கொழும்பு-கண்டி நெடுஞ்சாலை மற்றும் தென் நெடுஞ்சாலை போன்றன உயர் பொருளாதார வரவுகளை உருவாக்குகின்றது (உரு.3). போக்குவரத்து அபிவிருத்திக்கான தேசிய பட்டியலில் இம்முதலீடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். கைவிடப்பட்ட பிரதேசங்களில் நேரடி இணைப்பு என்ற வகையில் இது எதனை உணர்த்துகின்றது?

மேலும் வலையமைப்பு பயனுறுதியை முன்னேற்றுவதற்கு அப்பால் பாடசாலைகள், வைத்திய வசதிகள், மற்றும் உள்நாட்டு சந்தைகள் போன்ற அடிப்படை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கும் போக்குவரத்து விருத்திகள் தேவைப்படுகின்றது. சமூக நலநன தெிகரிக்கவும் உள்ளக வாய்ப்புகளில் உச்சப் பயனை ஈட்டவும் மக்களுக்கு மேற்குறிப்பிட்ட சேவைகளை பெற்றுக்கொள்வது மிகம் அவசியமான அதேவேளை, பின்தங்கிய கைவிடப்பட்ட பிரதேசங்களில் போக்குவரத்து சேவைகளை வழங்குதல், பேணுதல் மற்றும் நிலைக்க செய்தல் போன்றவற்றுக்கான செலவு அதிகமானது. குறைந்த கேள்வியானது நிர்ணயிக்கப்பட்ட உயர் சேவைகளை கொண்ட முறையான போக்குவரத்து சேவை வழங்குனரை கவராதப்படசத்தில் அப்பிரதேச வாசிகளினால் செயற்படுத்தவும் பேணவும் முடிந்த இடைநிலை போக்குவரத்து வழிவகைகளை (Intermediate Mode of Transport) ஊக்கப்படுத்துவது ஒரு சவாலாக காணப்படலாம். சைக்கிள்கள், கைவண்டிகள், மோட்டார் வாகனங்கள், மாட்டு வண்டி, டிரக்டர்கள் போன்ற வாகனங்கள் சாதாரணமாக கிராமபுறங்களில் போக்குவரத்துக்காக உபயோகிக்கப்படுகின்றன. இச்சேவைகளை வழங்குவதற்கும் முகாமை செய்வதற்கும் சமுதாய பங்களிப்பினை ஊக்கப்டுத்தல் கிராமப்புற நகர்வினை அதிகரிக்கும் நம்பிக்கையான தெரிவாக கொள்ளலாம்.

இறுதியாக, தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் உள்ளீடு இலக்கு: வடக்கு கிழக்கை போன்ற சில பித்தங்கிய பிரதேசங்களில் குடிப்பெயர்வு மற்றும் பிராந்திய இணைப்பிலான வர்த்தகமும் நீடித்த போர் சூழ்நிலை மற்றும் உள்நாட்டு பிரிவினை காரணமாக மந்தக் கதியிலேயே நகர்கின்றது. சமாதானத்தின் உடனடி நன்மைகளாக உற்பத்திகளின் வேகமான நகர்வு மற்றும் விலைகளின் ஒருங்கிணைப்பினையும் குறிப்பிடலாம். தமிழீழ விடுதலை புலிகள் 1990 ஆம் ஆண்டில் வட மாகாணத்தை குறிப்பாக யாழ்ப்பாண

தீபகற்பத்தை தமது இராணுவ ஆட்சியின் கீழ் கொண்டுவந்த பின்னர் அங்கு பொருளாதார தடை விதிக்கப்பட்டதை கவனித்தில் கொள்ள வேணடும். இத்தீபகற்பத்தை 1995 ஆம் ஆண்டளவில் அரசு மீண்டும் அதனுடைய ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது. எனினும் சரக்குகளின் போக்குவரத்து கப்பலின் மூலம் மாத்திரமே திருக்கோணமலையிலிலுந்து இடம்பெற்றது. நாட்டின் ஏனைய பாகங்களுடன் யாழ்ப்பாணத்தின் வீதி இணைப்பு 2002 போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் A9 நெடுஞ்சாலை மூலம் தற்காலிகமாக மீள மேற்கொள்ளப்பட்ட போதிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சட்ட விரோத வரிவிதிப்பின் காரணமாக பொருட்களின் வரவு கட்டுபடுத்தப்பட்டிருந்தது. மீண்டும் மேலோங்கிய போர் சூழ்நிலையின் காரணமாக A9 வீதி 2005 ஆம் ஆண்டு மீள மூடப்பட்டது.

**உரு 4: சமாதான நன்மைகளை பெற்றுக் கொள்ளல்: யாழ்பாணம் மற்றும் கொழும்பிற்கிடையிலான குறிப்பிட்ட பொருட்களின் விலை ஒருங்கிணைப்பு**




தகவல்: "பிரைஸ் மானிட்டர்", பத்திதுறை நிலையம், செப்டெம்பர் 2009

அரசின் 2009 இராணுவ வெற்றியின் காரணமாக ஸ்தாபிக்கப்பட்ட பொது நிறுவனங்களால் பொருட்கள், பண்டங்களின் போக்குவரத்துக்காக A9 வீதி மீண்டும் திறக்கப்பட்டது. இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பு இசைவுச்சான்று பெற்ற பின்னர் சரக்குவண்டி குழாம்கள் யாழ்ப்பணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்தும் பொருட்களை நகர்த்துவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவு என்ன? யாாழ்ப்பாணத்திற்கும் நாட்டிக் ஏனைய பாகங்களுக்குமிடையே காணப்பட்ட வேகமான விலை ஒருங்கிணைப்பாகும். போர் சூழ்நிலையின் உச்சக்கட்டத்தில் 2007 இன் பிற்பகுதியில் ஒரு மூட்டை சீமெந்தின் விலை நாட்டிக் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்பாணத்தில் மாத்திரம் நான்கு மடங்கு அதிகமாகவே காணப்பட்டது. பருத்தித்துறை அபிவிருத்தி நிலையத்தினால் மாதாந்தம் நடாத்தப்படும் விலை கண்காணிப்பிற்கமைய மே--ஜுலை 2008 என்ற மூன்று மாதக்காலத்தில், யாழ்ப்பாணத்தில் குறிப்பிட்ட பத்து வகையான பொருட்களின் விலைத்தொகை கொழும்புடன் ஒப்பிடுகையில் 48 சதவீதமாக காணப்பட்டது. மே--ஜுலை 2009 இல் அதே பொருட்களுக்கான சராசரி விலைத்தொகை 24 சதவீதமாக குறைந்ததை அவதானிக்கலாம் (உரு.4).

நாட்டை பொது தாபனங்கள் ஒன்றினைக்கும் கட்டத்தில் இடைநிலை பகுதியில் தொழிலாளர் மற்றும் உற்பத்தி நகர்வு அதிகரிக்கும். ஆனால் குறுகிய காலப்பகுதியில் போர் முடிவுக்கு வந்த பிரதேசங்களில் பொருளாதார நிலையை உயர்த்த இந்நடவடிக்கை உபாயமிக்க உள்ளீடுகளை கொண்டிருத்தல் அவசியம். எனினும், முன்னேற்றமடைந்த பகுதிகளிலிருந்து இத்தாபனங்களை மீள நகர்த்துவதை பார்க்கிலும் பாவனைக்கும் பாவனையாளர்களுக்கும் நிலநகர்வை மேற்கொள்ள வேண்டும். இது

கட்டமைப்பு உருமாற்றத்தை துரிதப்படுத்தும். விவசாய நிலச்சந்தைகளின் செயற்பாட்டினை அதிகரிக்க ஸ்தாபன சீர்திருத்தங்கள் ஓர் முக்கிய தேவையாகும். நில பாவனை மற்றும் கைமாற்றத்தை ஒழுங்கு செய்யும் நில அபிவிருத்திச் சட்டங்கள், பாரிய விகிதாசாரத்தில் மக்களை விவசாயத்திலேயே தங்கியிருக்கும் நிலைக்கு மக்களை தள்ளியுள்ளது. தங்களது உழைப்பிற்கேற்ற ஊதியமில்லாத காரணத்தினால் அவர்கள் வறுமையிலேயே வாழ்கின்றனர். இச்சட்டங்களை சற்று தளர்த்துவதன் மூலம் விவசாய வருமானங்களை உயர்த்தும் சாத்தியகூறுகள் தென்படுவதுதோடு வறுமை குறைப்பினை அதிகரித்து நீண்டகால மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

பொருளாதார அபிவிருத்தியை முன்னேற்றும் குறிப்பிட்ட மானியங்கள் காணி நிலச் சந்தையின் நிலையற்ற தன்மையை சரிசெய்வதற்குமான ஸ்தாபன சீர்திருத்தங்கள் மூலமாக நன்கு செயற்படும். பின்தங்கிய பிரதேசங்களில் அநேகமானவை இயற்கை வளங்கள் நிறைந்தவை. அத்துடன் CIC நிறுவனத்தார் (Chemical Industries Colombo), ஹேய்லிஸ் நிறுவனத்தார் (Hayleys) போன்ற தனியார் முதலீட்டாளர்கள் பிரதேசத்தின் கிராமிய பொருளாதார ஆற்றலின் மூலம் நன்மைகளை பெற தங்களுடைய செயற்பாடுகளை கிழக்கு மாகாணத்திற்கு நீடித்துள்ளனர். தொழிநுட்ப முன்னேற்றம் தொடர்பாக அறிவையும் பண்ணை வெளியீடுகள் மற்றும் உற்பத்திக்கான ஆற்றலையும் பெற்றுக்கொள்ள உதவும் தற்போதைய முயற்சிகள், சந்தை இணைப்புகளை விருத்தி செய்யும். அதேபோல அதிக விளைச்சலை அளிக்கும் நெல் வகைகள், மாற்று பயிர்செய்கைகள், நீர்பாசன நுட்பங்கள் மற்றும் இயற்கை இயல்புமிக்க பசளை வகைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்தல் அவசியம்.

## பிரதேச ரீதியிலான குறிப்பிட்ட சவால்களுக்கேற்ற கொள்கைகளை இயற்றல்

வினைத்திறன்மிக்க வகையில் வளமையுடன் மக்களை தொடர்புபடுத்த வெவ்வேறு பிரதேசங்களில் மக்கள் முகங்கொடுக்கும் குறிப்பிட்ட சவால்களுக்கமைய கொள்கைகள் உருவாக்கப்பட்டிருத்தல் அவசியம். சுகல இடங்களிலும் அடிப்படை சேவை வழங்கலை விருத்தி செய்தலே வெற்றிகரமான கொள்கை முயற்சிகளுக்கான அடிக்கல்லாக காணப்படுமென இவ்வறிக்கையின் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அத்துடன் அதிகளவிலான வறிய மக்கள் வாழும் பின்தங்கிய பிரதேசங்களை முன்னேற்றமடைந்த பிரதேசங்களுடன் நேரடியாக இணைக்கும் உட்கட்டமைப்பானது வர்த்தகத்தையும் வாணிகத்தையும் உயர்த்தும். சந்தை சக்திகளால் கைவிடப்பட்ட சில பிரதேசங்களில் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப குறிக்கோள்களுடைய உள்ளீடுகள் அவசியம். முன்னுரிமைபடுத்தலின் பிரதான காரணிகள் எவை?

குறிப்பிட்ட பிரதேசத்துக்கான சவால்களின் கடுமையான தன்மைகேற்ப கொள்கைகளின் பண்பாற்றலை அறிந்து செயற்பட ஒரு கட்டமைப்பை உலக அபிவிருத்தி அறிக்கை 2009 வடிவமைத்துள்ளது. அத்துடன் இவை வறுமையான பிரதேசங்கள் எவை மற்றும் வறிய மக்கள் வாழும் பிரதேசங்கள் எவை என்பதை காட்டும் வறுமை வரைப்படங்களோடு நன்கு தொகுக்கப்பட்டு காணப்படுகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிட்ட இரண்டும் ஒன்றல்ல. ஏனெனில் வறிய மக்கள் வறிய பிரதேசங்களை விட்டு நகர்வதற்கான காரணங்களை அதிகமாக கொண்டுள்ளனர். முக்கியமாக மேல் மாகாணத்தில்-- பல வறிய மக்கள் வளமைக்கு அருகிலேயே வசித்து வருகின்றனர் என்பதை காட்டும் உரு. 3 இல் காணப்படும் "வறுமை மலைகளை" சற்று நோக்குக. தலைக்கு ரூபா 6935/= செலவினையும் வறுமை தகவு 8.2 சதவீதத்தினையும் கொண்ட மேல் மாகாணமே நாட்டின் வளமைமிக்க பிரதேசமாகும். அதேவேளை இலங்கையின் 16.8 வறியவர்களின் வசிப்பிடமும் இம்மாகாணமே. மாறாக, தலைக்கு 3879/= செலவினையும் வறுமை தகவு 27 சதவீதத்தினையும் கொண்ட ஊவா மாகாணமே நாட்டின் வறிய பிரதேசமாகும். ஆனால் இலங்கையின் 12.3 வீத வறியவர்களுக்கு மாத்திரமே வசிப்பிடமாக இது காணப்படுகின்றது.

**உரு 5: வளமையை நோக்கி மக்களை இணைத்தல்: பிரதேச ரீதியிலான குறிப்பிட்ட சவால்கள்**




தகவல்: CPP குழு

வறிய மக்கள் எங்கு வாழ்கின்றனர் என்பதை உரு. 5 காட்டி வளமைமிக்க பிரதேசங்களுடன் வறியமக்களை எவ்வாறு தொடர்புபடுத்துவது என்பதை முன்னுரிமைப்படுத்துகின்றது. வறியவர்களின் செறிவு மேல் மாகாணத்திலேயே காணப்படுகின்றதேயன்றி பின்தங்கிய பிரதேசங்களிலல்ல. வளத்துடன் மக்களை இணைப்பதற்காக பின்வரும் முன்னுரிமைபடுத்தப்பட்ட விடயங்களை இவ்வறிக்கையின் ஆய்வும் உலக அபிவிருத்தி அறிக்கை 2009 இல் காணப்படும் கொள்கை சட்டகமும் எடுத்துக்காட்டுகின்றன:

- சிதறப்பட்டு காணப்படும் நாட்டின் வறிய மக்களில் ஓர் சிறு பாகம் ஊவா, வடமத்திய, மற்றும் வடமேல் மாகாணங்களிலிருந்து வந்துள்ளனர். தொடர்புபடுத்தல் கொள்கைகளின் மூல கையிறுப்பு தொழிலாளர் நகர்வினை விருத்தி செய்வதற்கான நடவடிக்கையாக காணப்பட வேண்டும். முதலீடுகள் கீழ்மட்ட பொருயாதார வரவுகளையே ஏற்படுத்தும் என்ற காரணத்தினால் இப்பிரதேசத்தில் பாரியளவிலான நீடித்து நிலைக்கக்கூடிய உட்கட்டமைப்புகளை உருவாக்கல் எவ்விதத்திலும் சாத்தியப்படாத ஒன்றாகும். ஆனால் சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படை சேவைகளின் தரத்தை அதிகரிப்பதனால் கொள்கைகள் குடிப்பெயர்வினை சாத்தியப்படுத்துவதோடு மக்களை வளமைக்கு அருகில் கொண்டு செல்லும்.

- இலங்கையின் 50 சதவீதமான வறிய மக்களின் வசிப்பிடமாக மத்திய, சபிரகமுவ மற்றும் தென் மாகாணங்கள் காணப்படுகின்றன. ஆனால் இவர்களின் நகர்விற்கு சில தடைகற்கள் காணப்படுகின்றன. தொழிலாளர் நகர்வினை முன்னேற்ற சேவைகளின் தரத்தை உயர்த்துவது முக்கியம், ஆனால், அது மாத்திரம் இதை சாத்தியப்படுத்தாது. மேல் மாகாணத்திலுள்ள சந்தைகளுடன் இப்பிரதேசங்களை நேரடியாக இணைப்பதற்கு உட்கட்டமைப்பு விருத்திகள் தேவைப்படுகின்றது. கொழும்பு-கண்டி அதி வேக சாலைகள் மற்றும் தென் மாத்தறை நெடுஞ்சாலை போன்ற முதலீடுகள் போக்குவரத்து செலவினை குறைப்பதன் மூலமாக உயர்மட்ட பொருளாதார வரவுகளை ஏற்படுத்தும் சாத்தியகூறுகள் உள்ளன. இது வேகமான வளர்ச்சி மற்றும் சகலதுமடங்கிய அபிவிருத்தி இரண்டிலும் வெற்றியடையச் செய்யும்.

- பெரும்பாகத்திலான நாட்டின் வறியவர்களை கிழக்கு மற்றும் வட மாகாணங்கள் கொண்டிராத பட்சத்திலும் உள்நாட்டு பிரிவினை காரணமாக தொழிலாளர் நகர்வு, உற்பத்தி பொருட்கள் கைமாற்றம் போன்றவை கட்டுபடுத்தபட்டுள்ளன. பொது ஸ்தாபனங்கள் ஒருங்கிணைப்பிற்கு உதவிபுரியும் என்பதை காட்டும் வகையில் உணவு பொருட்களின் விலை வதில் ஒருங்கிணைய முனைகின்றன. எனினும் குறுகிய காலத்தில் சமாதான நன்மைகளை அதிகரிக்க இப்பிரதேசங்களில் வளமையை ஏற்படுத்துவது மிகவும் அவசியமான ஓர் விடயமாகும். ஆனால் இப்பிரதேசத்தின் பொருளாதார ஆற்றலை உபயோகத்திற்குள்ளாக்குவது மேல் மாகாணத்திலிருந்து பொருளாதார செயற்பாடுகளை வேறு இடங்களுக்கு எடுத்து செல்லும் கொள்கைகளின் அடிப்படையில் இடம்பெறகூடாது. இதைவிட விவசாய நிலங்களின் உபயோகம் மற்றும் கைமாற்றத்தை விருத்தி செய்யும் மட்டத்தில் இவை காணப்பட வேண்டும். மேலும் உழவர் அல்லது கமத்தொழில் செய்பவர்களுக்கு சந்தை தொடர்புகளை மேற்கொள்ள உதவி புரியும் குறிகோள் மிக்க முயற்சிகளை கொண்டிருத்தல் வேண்டும். இம்முயற்சியை தொடாந்து அடிப்படை பொது சேவை வழங்கல் மற்றும் தரத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பொது ஸ்தாபனங்களும் சேவை வழங்கல் தரங்கள் மற்றும் உட்கட்டமைப்பு தொடர்பும் குறிகோள்மிக்க உள்ளீடுகளும் என்ற இயல்பாற்றலை அறிந்து செயற்படகூடிய கூட்டிணைப்பினை உபயோகித்து வளமையுடன் மக்களை இணைப்பதற்கான கொள்கை தெரிவுகளை உரு.1 தொகுத்து வழங்கியுள்ளது. மாகாணங்களுக்கு மத்தியில் வளர்ச்சியினால் ஏற்பட்ட நன்மைகளை பகிர்ந்தளிக்கும் அதேவேளைநடுத்தர வருமானதிற்கூடான பயணத்தை அதிகரிக்கவும் மேலும் இக்கொள்கைகள் உதவிசெய்கின்றன. பொருளாதார வளமை சில பிரதேசங்களில் மாத்திரமே கவனக்குவிப்பை செய்கின்றன என்பதை கொள்கை இயற்றுனர்கள் கண்டுக்கொள்வார்கள் ஆனால் இதன் மூலம் அதிகளவிலான மக்கள் வளமையுடன் இணைக்கபடுவார்கள்.

**உரு. 1: ஒவ்வொரு கூற்று தொகுதிக்கும் ஒரு யுத்தி-மக்களை வளமையுடன் இணைப்பதற்கான முன்னுரிமைகள்**

| | | | |
|---|---|---|---|
| **மாகாணங்கள்** | வடமத்திய, வடமேல், ஊவா மாகாணங்கள் | மத்திய, சபிரகமுவ, தென் மாகாணங்கள் | கிழக்கு, வடக்கு |
| **சவால்கள்** | செறிவற்ற மக்கள் தொகையை கொண்ட பின்தங்கிய பிரதேசங்கள் (பொருளாதார தொலைவு) | செறிவான மக்கள் தொகையை கொண்ட பின்தங்கிய பிரதேசங்கள் (பொருளாதார தொலைவு மற்றும் தவறிய மக்கள் செறிவு) | செறிவற்ற சனத்தொகையை கொண்டதும் உள்நாட்டு பிரிவுகளை கொண்டதுமான பின்தங்கிய பிரதேசங்கள் (பொருளாதார தொலைவு மற்றும் உள்ளக பிரவுகள்) |
| **கொள்கை முன்னுரிமைகள்** | | | |
| **இடஞ்சார்ந்த குருட்டு தன்மையிலான ஸ்தாபனங்கள்** | சுகாதார மற்றும் கல்வி விளைவுகளை விருத்தி செய்தல். சுத்தமான நீர் வினியோகம் மற்றும் ஆரோக்கியம் | சுகாதார மற்றும் கல்வி விளைவுகளை விருத்தி செய்தல். சுத்தமான நீர் வினியோகம் மற்றும் ஆரோக்கியம் | சுகாதார மற்றும் கல்வி விளைவுகளை விருத்தி செய்தல். சுத்தமான நீர் வினியோகம் மற்றும் ஆரோக்கியம்<br><br>நில உபயோகம் மற்றும் மாற்றத்தின் பயனுறுதியை விருத்தி செய்தல் |
| **இடஞ்சார்ந்த இணைப்பினை கொண்ட உட்கட்டமைப்பு** | | பிராந்திய மட்டத்திலான போக்குவரத்து உட்கட்டமைப்பு- பொழும்பு மாநகர பிரதேசத்தினூடான இணைப்பினை விருத்தி செய்தல் | |
| **இடஞ்சார்ந்த இலக்கிலான உள்ளீடுகள் / தலையீடுகள்** | | | விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கைதொழில்களுக்கான சந்தைகள்<br><br>சந்தை தொடர்பு விரிவாக்கங்கள்<br><br>கொழும்பு மாநகரத்திற்கு வெளியே செயற்பாடுகளை கொண்டு செல்ல வேண்டாம். |

## Endnotes

1 “கொண்டைனரைசே‘ன் இன்டர்ந‘னல்” என்ற சஞ்சிகையின் உலக துறைமுகங்கள் வரிசையில் குறிபிடதக்க ஏற்றுமதி சரக்குடன் 2006ல் 34வது இடத்திலிருந்து 2008ல் 27வது இடத்தை கொழும்பு எட்டியுள்ளது. உலகலாவிய பொருளாதார பின்னடைவின் காரணமாக கப்பல் சரக்களவு கூர்மையான வீழ்ச்சியடைந்தமையை கவனத்தில் கொள்ளவும். எனினும் தற்பொழுது இது மாறி வருகின்றது.

2 வருடாந்த கைதொழில் புள்ளி விவரவியல் 2003: விலைகள் 2007: 80 சதவீத கைதொழில் வரவு.

3 உலக வங்கியால் ஏப்ரல் மாதம் 2009 இல் நடாத்தப்பட்ட கப்பல் போக்குவரத்து கட்டணங்கள் ஆய்வின் அடிப்படையில் இலங்கையின் மதிப்பு தொகைகள் காணப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் மதிப்பானது கொல்கலன் கப்பல் போக்குவரத்து கட்டணங்கள் தொடர்பான பொது வெளியீட்டின் அடிப்படையில் காணப்படுகின்றது. மையிலுக்கு இரண்டு டாலர் அல்லது கிலோமீற்றருக்கு 1.25 டாலர் விலையினை குறிக்கும் பெருவிரல் அளவு விதி பொது கூற்றினை கொண்டுள்ளது.

4 மட்டகளப்பு நகரம் (மட்டகளப்பு மாவட்டம்), வவுனியா நகரம் (வவுனியா மாவாட்டம்), கல்முனை (அம்பாறை மாவட்டம்) மற்றும் யாழ்பாணத்தின் திருநெல்வேலி சந்தை போன்ற இடங்களிலில் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை விலைகளை பதிவு செய்யும் (த பிரைஸ் மொனிட்டர்) என்ற விலை கண்காணிப்பு அறிக்கை. இதன் மாதாந்த தரவுகள் இரு வார அவதானத்தின் சாதாரண சராசரியாகும். இதில் காணப்பட்ட 10 பொருட்களும் யாழ்பாணம் இறக்குமதி செய்யும் பொருட்களில் உள்ளடங்கும். அத்துடன் ஒருங்கிணைப்பின் மூலமாக எதிர்பார்க்கப்பட்ட விலை வீழ்ச்சி காணப்பட்டது. தனிமைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் சந்தையில் இடம் பெற்ற அளவிற்கதிகமான வினியோகம், நாட்டின் ஏனைய பாகங்களிலும் பார்க்க யாழ்பாணத்தில் சில பொருட்களின் விலை குறைவதற்கான காரணமாகும். உதாரணம்: வெங்காயம், சோயா, கரட்